12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது

# குருவழிச் சித்தியால்தான் தருவாகவும், திருவாகவும் உருவாக முடியும்!



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,120 ஆடி மாதம்.

**இந்து இலக்கியக் கழகம்**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“குருவழிச் சித்தியால்தான் தருவாகவும், திருவாகவும் உருவாக முடியும்!”** - 22/06/1985இல் குருதேவர் ஆணைப்படி தலைமைப்பீடத்திலிருந்து வடலூரில் உள்ள வள்ளலார் திருச்சபை துறவி கந்தசாமி அவர்களுக்கு எழுதப்பட்ட கட்டுரை அஞ்சலின் நகல்.

2. **“பாலாலயப் பூசைமுறை, பூசாவிதிகள்”** - 05/06/1985இல் குருதேவர் ஆணைப்படி தலைமைப்பீடத்திலிருந்து அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் அவர்களுக்கு எழுதப்பட்ட கட்டுரை அஞ்சலின் நகல்.

3. **“செயல் விளங்கு அறிவுரை நல்கு திருவோலை”** - 1985இல் குருதேவர் சொல்ல தலைமைப்பீடத்திலிருந்து சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களுக்கு எழுதப்பட்ட அஞ்சலின் நகல்.

4. **“அடிமைத் தமிழா முடிவெடு விடிவு பெற!”** - தலைமைப்பீடத்திலிருந்து எழுதப்பட்ட கவிதை.

# குருவழிச் சித்தியால்தான் தருவாகவும், திருவாகவும் உருவாக முடியும்!

சென்னை-11,
22-6-85.

பெருமதிப்பிற்குரிய பெரியவர், துறவி கந்தசாமி அவர்கள் சமூகத்துக்கு, (அருட்பா கொண்டல், துறவி கந்தசாமி, அருட்பெருஞ்சோதி வள்ளலார் திருச்சபை, வடலூர்-607303);

1) ஐயா, தாங்கள் 26-5-85இல் பொறுப்பாளர் முகவரிக்கு (கவிக்குமார், 56, NGO காலனி, பொன்னேரி) எழுதிய அஞ்சலுக்கு, மதுரை மாவட்டச் செயற்குழு மூலம் பதில் எழுத ஆணையிடப்பட்டு, எமது குருதேவரே சித்தரடியான் வெ.செகதீசன், (காமாட்சியம்மன் சன்னிதானம்) அவர்களைப் பணித்தார். மதுரையில், பால்குடப் பெருவிழா காரணமாக நேரமின்மையால் உடனடியாக பதில் அனுப்ப முடியாமல் 16-6-85இல் தங்களுக்கு பதில் அனுப்பியிருக்கிறார். அவ்வஞ்சலின் நகல் ஒன்று இன்று குருதேவர் (மருத்துவர் குடியிருப்பு, ESI மருந்தகம், செம்பியம், சென்னை-11) அவர்களுக்கு வந்தது. அது கண்டு தங்களுக்கு இவ்வஞ்சலை சித்தரடியார் பெ.சௌந்தரராசன் B.E., (தொட்டியம் மருதக்காளி சன்னிதானம்) எழுதுகிறேன்.

2) ஐயா! தங்களுக்கு எழுதிய பதில்கள் அனைத்தும் சரியானவையே! ஆனால், சித்தர் மகன்களில் சித்தராலேயே மிகவும் துடிதுடிப்பும், வேகமும், கொள்கை வெறியும் உடையவர் என்று கூறப்படும் வெ.செகதீசன் (அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சி அம்மன்

சன்னிதானம்) அவர்கள் எழுதியுள்ள பதிலில் வேகமும், வெறியும் மிகுதியாக உள்ளன. அன்புகூர்ந்து மனம் புண்பட்டு விட வேண்டாம். தாங்களோ அல்லது தங்களைச் சார்ந்தவர்களோ, தங்களுடைய ஆறு பத்திரிகைகளின் பிரதிநிதிகளோ, தங்களுடைய சென்னை மாநகர மாநிலக் குழுவினரோ எப்போது வேண்டுமானாலும் குருதேவரைச் சந்தித்து தேவையான விளக்கங்களைப் பெறலாம். அல்லது குருகுலத்தில் (மதுரை, மேலூர், கொட்டாம்பட்டி, சித்தர் மாநகர்) எங்களது தலைமைச் செயலாளரையோ அல்லது எங்களது இயக்கத்திலுள்ள எவரையோ சந்தித்தாலும் போதும்; உங்களுக்கு முழுமையான விளக்கம் கிடைக்கும்.

<u>**குறிப்பு**</u>:- எங்களது வைகாசித் திங்கள் பால்குட விழாவின் போது 1, 2/6/85 தேதிகளில் தங்களுடைய அஞ்சலை ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் படித்துக் காட்டி எங்களுடைய குருதேவர் தகுந்த விளக்கங்களை வழங்கினார்.

அதாவது, "... கோவணாண்டி முதல் கோடீசுவரர் வரை பல தரத்தாரும், திறத்தாரும் கோடிக்கணக்கில் அடியவர்களாக இருக்கின்ற பெருமையைப் படைத்த வடலூர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் ஞானசித்தர் இராமலிங்க அடிகளாருக்கு எதிர்ப்பும், ஏளனமும், பழியும், இழிவும் ஏற்பட்ட உடனேயே எந்நேரமும் கறியும், மீனும் சாப்பிடக் கூடிய பதினெண்சித்தர்களின் அடியவர்கள்தான் கொதித்துக் குதித்தெழுந்து மறுப்பும், எதிர்ப்பு அறிக்கையும் வழங்கினார்கள். ஆறுமாதம் கழித்து முதியவரும், பெரியவரும், நாடிநரம்பெல்லாம் தளர்ந்து, பத்தியிலே தோய்ந்து, அருளிலே நனைந்து, மென்மைப்படும் அளவு போன துறவி கந்தசாமி அவர்கள்தான் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் தங்களுடைய சமரச சன்மார்க்கச் சங்கத் தலைவரின் மானங் காக்க வீரிட்டுப் போரிட்ட நமக்கு ஒரே ஓர் அஞ்சலட்டை அனுப்பியிருக்கிறார்.

ஆறு மாதமாகியும் இராமலிங்க அடிகளின் பெயரைச் சொல்லி விழாக்களும், பட்டங்களும், சங்கங்களும், மன்றங்களும், கூட்டங்களும், நன்கொடைகளும், ... அனுபவித்து வரும் கணக்கற்றவர்கள் தன்னலத்தாலும், பிற மதங்களிடம் கைக்கூலி பெறுவதாலும் தங்களுடைய சன்மார்க்கச் சங்கத் தலைவரின் மானங் காக்கத் தாங்களும் முன்வரவில்லை; முன்வந்த நம்மையும் பாராட்டவில்லை. இதுதான் இந்துமதத்தின் நிலை; வடலூர் இராமலிங்க அடிகளின் பெயரால் உள்ள அனைத்துக் கழகங்கள், குழுக்கள், சபைகள், சங்கங்கள், மன்றங்கள், மடங்கள், ... முதலிய அனைத்தின் நிலை. எனவே, பாவம் நல்லவர் துறவி கந்தசாமி அவர்கள். அவரை மதித்து நீங்கள் பதில் அனுப்புங்கள்.

இராமலிங்க அடிகள் எமக்கும், நமக்கும் சொந்தக்காரர்தான். அவர் சித்தர்களின் வீட்டுப் பிள்ளைதான். அவர் சித்தர்நெறிச் செல்வர்தான். அவரைத் தெரியாதவர்கள்தான் அவர் வேறு நாம் வேறு என்று எழுதுகிறார்கள். <u>பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த இந்துமதத்தை ஒப்புக்கொண்டு வாழ்ந்தவர்தான் இராமலிங்க அடிகளார். அவரே சொல்லியிருக்கிறார், இந்துமதத்தில் வாழையடி வாழையெனத் தோன்றி வரும் அருளாளர்களில் தானும் ஒருவன் என்று; அப்படியானால்</u> <u>**குருதிப் பலியும், இறைச்சிப் படையலும் உயிர்நாடியாக இருக்கக் கூடிய இந்துமதத்தை**</u> <u>மறுக்கவில்லை, எதிர்க்கவில்லை என்பது புரியலாம்</u>.

பதினெண்சித்தர்கள் அருள் தரத்திற்கும், திறத்திற்கும், வளத்திற்கும் ஏற்பவே படிப்படியாக 48 வகையான நிலைகளை உடைய கடவுள்களையும் (வழிபடுநிலையினர்), கருவறை மூலவர்களையும், வெட்டவெளிக் கருவறை மூலவர்களையும், சித்தர்களையும், அருளாளர்களையும், அருட் பட்டத்தார்களையும் படைத்தார்கள். எனவே, <u>48 வகைச் சித்தர்களில் ஒரு வகைச் சித்தரான **ஞான சித்தர்** என்ற வகையைச் சார்ந்தவரே இராமலிங்க அடிகள்</u>. இம்மண்ணுலகில் இந்துமதம் தோற்றுவிக்கப்பட்டு 43,73,085 ஆண்டுகள் ஆகிறதென்றால்; <u>**இவ்வளவு பெரிய நெடிய**</u>

**<u>இடைவெளிக் காலத்தில் விரல்விட்டு எண்ணிடக் கூடிய அளவிற்கு ஒருசில ஞானசித்தர்கள்தான் தோன்றி இருக்கிறூர்கள்</u>** என்ற பேருண்மையை ஆராய்ந்தாலேயே தெரியும். ஞானசித்தர்களும், ஞானசித்தர்களின் நெறியும் பூக்காத, காய்க்காத திடீர் தோற்றங்களே. அதாவது, இவர்களும், இவர்களின் தத்துவங்களும் அற்புதமான கலைப்படைப்புக்களே ஆவார்கள்; உலகியலின் நடைமுறைக்கு பயன்படுத்தப் படாதவைகளே.

இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களையும், அவர்களின் வரலாறுகளையும், தத்துவங்களையும், அறிவியல்களையும், அருளியல்களையும், சமூகவியல்களையும், அரசியல்களையும், சமயவியல்களையும் தெரியாதவர்களும், புரியாதவர்களும் இராமலிங்க அடிகளார் பெயரைச் சொல்லிக் கொண்டு பொழுதுபோக்குக் கழகங்கள் (Recreation Clubs), வணிக மையங்கள் (Commercial Centres), இலக்கியக் கழகங்கள் (Literary Associations) ... முதலியவைகளையே நடத்திக் கொண்டிருக்கிறூர்கள். ஆயிரமாயிரம் அப்பாவி மக்கள் விளக்கில் விழும் விட்டில் பூச்சிகள் போல் மேற்படி முதலாளிகளின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு அடிமைகளாகவும், எடுபிடிகளாகவும் ஆகி நலிந்து மெலிந்து அழிந்தொழிகிறூர்கள். எனவே, நாம்தான் அவர்களையெல்லாம் காப்பாற்றிட வேண்டும். அதற்குரிய வண்ணம் துறவி கந்தசாமி போன்ற பெரியார்களே சித்தர்நெறி பற்றி அறியச் செய்ய வேண்டும்.

3) நமது செயல்திட்டப்படி வடலூர் **<u>ஞான சித்தர்</u>** இராமலிங்க அடிகளின் சிலைகளை ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகச் சக்கரங்கள் வைத்து வெட்டவெளிக் கருவறைகளும், கருவறைகளும் உண்டாக்க வேண்டும். பதினெண்சித்தர்களின் பூசாவிதிப்படி உயிர்ப்புச் செய்தல், புத்துயிர்ப்புச் செய்தல், குடமுழுக்குச் செய்தல், குருதி அவிர்ப்பலி வழங்கி யாகம் செய்தல், இறைச்சிப் படையலிட்டு யக்ஞம் செய்தல்,

ஓமம், ஓகம், வேள்வி, ... முதலியவற்றிற்குரிய பச்சை இறைச்சி ஆகுதி கொடுத்தல், காயந்திரி மந்தரம், மாந்தரம், மாந்தரீகம், மந்திரம், மந்திறம் முதலியவைகளின் மூலம் அவரிடம் இருந்து அருளைப் பெறல், சீவகாயந்திரி மந்திரம் மூலம் அவரின் அருள் வளவளர்ச்சி பெறச் செய்தல்; அருட்சினை மந்திறம், கட்டு மந்திறம், உயிர்ப்பு மந்திரம் ... முதலியவற்றின் மூலம் பொதுமக்கள் அவரின் (இராமலிங்க அடிகளின்) அருளைப் பெறுமாறு செய்தல் வேண்டும்.

நாம் நமது யாகசாலைகளில் அ.வி.தி. நிலையங்களில், அருட்கோட்டங்களில், தவப் பள்ளிகளில், குரு குலங்களில், வேள்விச் சாலைகளில், பத்திப் பாட்டைகளில், சத்திச் சாலைகளில், சித்திச் சோலைகளில், முத்தி மன்றங்களில், ... மேலே கூறிய நமது செயல்திட்டப்படி இராமலிங்க அடிகளாருக்கு அருளுலக அறிமுகங்களையும், புரிமுகங்களையும் வழங்க வேண்டும். அவர் இறவாமையையும், பிறவாமையையும் பெற்றாரா? அல்லது இறவாமை மட்டும் பெற்றாரா? அல்லது இறவாயாக்கைப் பெரியோனாக மாறினாரா? ... என்ற பேருண்மைகளை யெல்லாம் நாம்தான் அநுபவப் பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

4) அருளுலக வள்ளல் பெருமான் தான் பாடிய அருட்பாக்களை அப்படியே திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருந்தால் போதும்; அருளுலகச் சத்திகளும், சித்திகளும், முத்திகளும் கிடைத்திடும் என்று எங்காவது வலியுறுத்திக் கூறியிருக்கிறாரா?

**குறிப்பு**:- அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வடலூர் இராமலிங்கம் பிள்ளை **மறை பொருளாகவோ, குறிப்புப் பொருளாகவோ** தமது அருட்பாக்களே அருளுலகத் திறவுகோல், அருளுலக வழி, அருளுலக வழித்துணை, அருளுலக வழிகாட்டி, அருள்வாழ்வின் விழி, ... என்று எங்காவது கூறியிருப்பதாக, எவரேனும் சான்றோ, ஊன்றோ காட்டுவாரேயானால்; அதாவது ஏட்டளவில் (Theoretical) நாம்

கேட்பதெல்லாம்; "ஒரு நூற்ருண்டுக்கு மேல் ஆகிறது, வள்ளல் பெருமான் ஒளி உடம்பு பெற்று. இந்த நெடிய இடைவெளிக் காலத்தில் அருட்பாக்களை ஓதியே வாழ்ந்தவர்கள் தொகை கோடிக்கு மேலேயே இருக்கும். இவர்களில் - ஆங்காங்கே மாரியம்மன், காளியம்மன், மோகினி, இடாகினி, இசக்கி, மாசாத்தி, முருகன், பராசத்தி, சாயிபாபா, இராமன், கண்ணன், சிவன், திருமால், ... முதலியவர்களின் பெயரால் சித்தியாளர்களும், சித்து விளையாடல்காரர்களும், சீவன்முத்தர்களும் ... தோன்றிச் செயல்பட்டிடுவது போல் - வடலூர் இராமலிங்க அடிகளின் பெயரால் எத்தனை சித்தியாளர்கள், சித்து விளையாடல்காரர்கள், சீவன்முத்தர்கள் தோன்றியிருக்கிருர்கள் என்று பட்டியல் தரமுடியுமா?

**<u>சிறப்புக் குறிப்பு</u>**:- '<u>சமசுக்கிருத மொழியில் மந்திரங்களைச் சொன்ஞல் சத்தியோ, சித்தியோ, முத்தியோ, அருளோ கிடைப்பது மிகமிக அரிது. இன்னும் சொல்லப் போஞல் சமசுக்கிருத மந்திரத்தைச் சொல்லி பேயைக் கூட ஓட்ட முடியாது...</u>' என்று பத்தாவது, பதிஞேராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், 48 வகைச் சித்தர்களும், பதின்மூன்று (13) வகைச் சித்தியாளர்களும், 48 வகைக் கருவறை மூலவர்களும், 48 வகை அருளாளர்களும், ... மிகமிகத் தெளிவாகக் கூறுவதையே கூட நாம் சற்றுத் தயங்கித்தான் வெளியிடுகின்ருேம்.

அதஞல்தான் ஞானசித்தரான இராமலிங்க அடிகளார் பாடிய அருட்பாக்களை அப்படியே திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டிருப்பதன் மூலம் எத்தகைய அருட்பயனும் விளைந்திடாது! விளைந்திடாது! விளைந்திடாது! விளைந்திடவே விளைந்திடாது. ஆஞல், அவர் ஏன் அல்லது எப்படி அல்லது எதற்காக அல்லது எவையெவற்றின் மூலம் அருட்பெருஞ்சோதி ஆண்டவராக மாறிஞர், சீவநிலை பெற்ருர், ஞானசித்தராக மாறிஞர் என்ற தத்துவ விசாரணை மூலம் கிடைக்கக் கூடிய மெய்ஞ்ஞானப் பொருளை செயலாக்கக் கூடியவர்கள், உறுதியாக

ஞானதேகம் பெறலாம், சிவநிலை பெறலாம், அருட்பெருஞ்சோதி ஆண்டவராகலாம்.

அதற்கு மாணிக்கவாசகரோ, திருஞானசம்பந்தரோ, திருமூலரோ, தில்லைப் பொன்மன்றிலாடும் கூத்தர் பெருமானே ஞானகுருவாக வரவேண்டும். அதாவது, **'குருவழிச் சித்தியால்தான், கருவழி நிலைகளை வென்று தருவாகவும், திருவாகவும் உருவாக முடியும்! முடியும்! முடியும்!' என்ற குருவாக்கு, குருவாக்கிய, குருவாசக, குருபாரம்பரிய வாசகச் செயல்விளக்கமே கருங்குழி இராமலிங்கம்பிள்ளை, ஞானவள்ளல், அருட்பெருஞ்சோதி ஆண்டவர், திருவருட்பா நல்கிய ஞானசித்தர், இராமலிங்க அடிகள் என்ற உயர்ந்த நிலையைப் பெற்றது** - என்று கருவூரர் வழிவந்த கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் எனப்படும் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் மிகத் தெளிவாகத் தன் காலத்து வாழ்ந்த ஞானசித்தர் வடலூர் இராமலிங்கம் பிள்ளை பற்றிக் கூறுகிறார். இவர் "வடலூர் ஞானவள்ளல் பெருமான் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் திருவருட்பா வழங்கிய கொடையாளர் ஞானசித்தர் வடலூர் இராமலிங்க அடிகளார்" என்ற தலைப்பில் தருகின்ற செய்திகள் ஏராளம்! ஏராளம்! ஏராளம்!

5) இயற்கையின் நீதிகளையெல்லாம் வென்று வாழ்ந்த சித்தர் ஏளனம்பட்டியார் கொந்தளித்து எழும் கடலலைகளின் தொடர் பேரொலி போல், ஞானசித்தர் இராமலிங்க அடிகளார் பற்றிய உண்மைச் செய்திகளை நாடெங்கும் எடுத்துக் கூறியும் அனைவரும் கேளாச் செவியினராக இருந்து விட்டார்கள். அவரின் தோல்வியை வெற்றியாக்க இதுகாறும் தோன்றிட்ட நான்கைந்து உலகப் பெரிய மார்க்சீய சிந்தனையாளர்களுள் ஒருவரான சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் தமது கொள்கைக்கும் மாறுக மதவாதியான அருட்பெருஞ்சோதி ஆண்டவர் ஞானசித்தர் வடலூர் இராமலிங்க

அடிகளாரின் உண்மையான வரலாற்றை நாடெங்கும் எடுத்துக் கூறினர். வழக்கம்போல் அனைவரும் கேளாச் செவியினராக இருந்து விட்டார்கள்.

யாமும் மிகப்பெரிய அளவில் அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் உண்மை வரலாற்றையும், ஆற்றலையும் தமிழகமெங்கும் கூறி வருகின்றோம். 1969-70இல் வடலூர் மேட்டுக்குப்பத்தில் மிகப்பெரிய விரிவுரையாற்றினோம். வடலூர் வள்ளல் பெருமானின் காலத்தில் வாழ்ந்த சித்தர் ஏளனம்பட்டியார் கூறிச் சென்றுள்ள செய்திகளைக் கூறிப் பார்த்து வருகிறோம். ஒரு பயனும் விளையவில்லை. காரணம் யாமும் மரக்கறி உணவு உண்டு வெள்ளாடை உடுத்தி, கட்டை கொட்டை மாட்டி அருட்பா கூறித் திரியவில்லை என்பதுதான். எனவே, யாம் அமைதியாகத்தான் இருந்தோம்.

ஆனால், அண்மையில் (1985 சனவரி திங்கள் ‘காதல் மோகினி’ என்ற இதழில்) ஒரு தமிழினத் துரோகி கைக்கூலி பெற்றுக் கொண்டு அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்கொடை வள்ளல், அருட்பா வழங்கிய அருட்கலைஞர், ஞானசித்தர், வடலூர் இராமலிங்க அடிகளாரை மிகமிகத் தரக்குறைவாகவும், இழிவாகவும், பழியாகவும் எழுதினான். ஆனால், பெரியவர் துறவி கந்தசாமி போல் இராமலிங்க அடிகளாரின் கொள்கைகளுக்காகத் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் சிலர் இருந்தும் கூட; இராமலிங்க அடிகளாரை இழித்தும், பழித்தும், அழித்தொழிக்க முயன்ற தமிழின விரோதியை, தமிழினத் துரோகியை, உண்மையான இந்துமதத்தின் கருங்காலியை ... கண்டிக்க யாருமே முன்வரவில்லை! முன்வரவில்லை! முன்வரவில்லை!

அதாவது, இராமலிங்க அடிகளார் அனாதையாக்கப் பட்டுவிட்டார்! அனாதையாக்கப் பட்டுவிட்டார்! அனாதையாக்கப் பட்டுவிட்டார்! இப்படி, இராமலிங்க அடிகளாருக்காக தமிழ் மொழியின் பெயராலோ, தமிழ் இனத்தின் பெயராலோ, தமிழ் நாட்டின் பெயராலோ, சன்மார்க்கச் சங்கங்கள் பெயராலோ, உண்மையான இந்துமதத்தின் பெயராலோ,

தமிழின் ஆர்வலர்களின் சங்கங்களின் பெயராலோ, 'தமிழ் வாழ்க!' என்று கூறும் அரசியல்வாதிகளின் பெயராலோ ஒரே ஒருவர் கூட வடலூர் இராமலிங்க அடிகளாருக்காக தன்மானத்துடனும், தன்னம்பிக்கையுடனும் போராட முன்வரவில்லை என்ற நாதியற்ற கதி ஏற்பட்டு விட்டதை எண்ணியெண்ணிக் குருதிக் கண்ணீர் வடித்து, கடலெனக் குமுறி, எரிமலையென வெடித்து எமது உணர்வுகள் எம்மைத் துன்பப்படுத்திய காரணத்தினுல்தான் சித்தர்களின் குலத்தில் தோன்றிய ஞானசித்தரை; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, அருட்பேரரசின் அரியணையில் அரசயோகியாக, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானமாக, ஞானத் தந்தையாக, ஞானுச்சாரியாராக, குருதேவராக, இந்துமதத் தந்தையாக, இந்துமத விழிச்சியுணர்வின் தலைவராக, இராசிவட்ட நிறைவுடையாராக, ஆத்தாள் அமளிகையாக, கொற்றவை இருக்கையாக, பராசத்தித் திருவடியாக, குருமகா சன்னிதானமாக, ஞாலகுரு சித்தர் கருவூறாராக இருக்கும் யாம்; பொறுப்போடும், பொறுமையோடும், அடக்கத்தோடும், அமைதியோடும், நிதானத்தோடும், சமாதானத்தோடும் உடனே சென்னை அண்ணாசாலைக்கும், இராயப்பேட்டை நெடுஞ்சாலைக்கும் ஆட்களை நேரிலனுப்பி அடிகளாரைப் பற்றித் தவருக எழுதிய எழுத்தாளனிடமும், அந்த மாத, மாத இதழுக்கு உரியவரிடமும் விளக்கம் கேட்டோம். நேர்மையான பதிலோ, சரியான பதிலோ, நிறைவான பதிலோ கிடைக்கவில்லை.

ஏனென்ருல், 'காதல் மோகினி'யில் ஞானசித்தர் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளாரைப் பற்றித் தவருக எழுதிய இதே பி.சி. கணேசன்தான் முன்பு 'இந்துமதம் அழைக்கிறது' என்ற இதழின் ஆசிரியராக இருந்த பொழுது இந்துமதத்தை வயிற்றுப் பிழைப்பாக வைத்துக் கொண்டிருக்கின்ற இந்துமத துரோகியான கிருபானந்த வாரியாரிடம் பேட்டி என்ற பெயரில் பதினெண்சித்தர்கள் தங்களின் தாய்மொழியான, அருளுலக ஆட்சிமொழியான அமுதத்

தமிழில் வழங்கிய அண்டபேரண்டமாளும் இந்துமதத்தைப் பற்றி மிகமிகத் தவறான, முரணான, முறையற்ற, நெறிகேடான, திசைதிருப்பலான ... கருத்துக்களை யெல்லாம் வெளியிட்டான்.

உடனே எமது இயக்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள், நிறுவன நிர்வாக ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்கள், 'குருதேவர்' ஏட்டின் ஆசிரியர் குழு, இ.ம.இ.க்கு உட்பட்ட பன்னிரண்டு நிறுவனங்களின் அலுவலர்கள் ... தொடர்ந்து சாரிசாரியாக நேரில் 'இந்துமதம் அழைக்கிறது' எனும் மாத இதழின் அலுவலகத்திற்குச் சென்று கண்டிப்புக் கட்டுரைகளையும், விவாதங்களையும் வழங்கி அவற்றின் சாரத்தை உடனே வெளியிட வேண்டும் என்றார்கள். அதற்கும் பொறுப்பான பதில் கிடைக்கவில்லை. அதனால், மிகப்பெரிய வன்முறை நிகழ்ச்சிகள் விளையக் கூடிய சூழ்நிலை உருவாயிற்று. இது உண்மையான (பதினெண்சித்தர்களின் தமிழினத்திற்குரிய) இந்துமதத்திற்கே பல சிக்கல்களையும், பிறச்சினைகளையும் உருவாக்கும் என்பதனால் செலவைப் பார்க்காமல் இந்துமத எழுச்சி மிக்க இளைஞர்களைச் சமாதானப்படுத்த,

(i) 'அருளுலக ஆட்சிமொழி' என்ற தலைப்பில் ஒரு புத்தகமும்,

(ii) 'இந்துமத விளக்கம்' என்ற தலைப்பில் மற்றொரு புத்தகமும் ஆக இரண்டு புத்தகங்கள் அச்சிட்டுத் தமிழகம் முழுதும் உள்ள பத்திரிகைகளுக்கும், பதிப்பகங்களுக்கும், மதவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும், இலக்கியவாதிகளுக்கும், மேடைப் பேச்சால் வயிறு பிழைப்பவர்களுக்கும் அனுப்பியதோடு; எமது நாற்பதுக்கும் மேற்பட்ட அ.வி.தி. மையங்களிலும், நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்யும் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் அருட்பணிகளிலும், எமது சுற்றுப்பயணங்களிலும் இன்றுவரை இந்த இரண்டு புத்தகங்களையும் விலைக்கு விற்று வருகிறோம். விலை 0.50 காசுகள்தான்.

'தமிழகம் ஆழ்ந்த உறக்கக் கட்டிலாக இருக்கிறதா? அல்லது மயானநிலை எய்திவிட்டதா? அருட்துறையைப் பொறுத்தவரையில்' - என்று ஐயப்படும் அளவுக்கு இன்றுவரை ஒரே ஓர் அஞ்சலட்டை கூட இந்த இரு புத்தகங்களுக்கும் பாராட்டுத் தெரிவித்தோ, எதிர்ப்பு தெரிவித்தோ வரவில்லை! வரவில்லை! வரவில்லை! வரவே இல்லை!

இதேநிலைதான், **வடலூர் இராமலிங்க அடிகளார் அவமானப்படுத்தப் பட்டதற்கு யாருமே ஏனென்று கேட்காத நாதியற்ற நிலை** உருவானதும். உடனே தன்னம்பிக்கையுடனும், தன்மானத்துடனும், தமிழ்மொழியின் மானங்காக்க, தமிழினத்தின் மானங்காக்க, தமிழ்நாட்டின் மானங்காக்க, இந்துமதத்தின் மானங்காக்க யாமே ஓர் இரவில் அறிக்கையும், கட்டுரையும் தயாரித்து; அச்சகம் கிடைக்காததால் பொன்னேரியில் பத்தாயிரம் பிறதிகள் (10,000) இரவு பகலாக அச்சிட்டு; மூன்று சித்தரடியார்களையும், ஒரு சித்தரடியானையும் சேர்த்து நால்வராக வடலூருக்கே அனுப்பித் தைப்பூசப் பெருவிழாவில் மூன்று நாட்கள் தங்கி அனைத்துச் சன்மார்க்கச் சங்கங்களுக்கும், சபைகளுக்கும், மன்றங்களுக்கும், அருட்பா பசனைக் குழுவினர்களுக்கும், அருட்பா பாடிய இசைக் குழுவினர்களுக்கும், அருட்பாவின் பெயரால் தலைவர்களாக உலா வருபவர்களுக்கும், இராமலிங்க அடிகளாரின் பெயரில் உள்ள கட்சிகளுக்கும், கழகங்களுக்கும், குழுக்களுக்கும், திருக்கூட்டங்களுக்கும், இராமலிங்க அடிகளாரின் பத்தர்களுக்கும், விருப்பாளர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் ... நேரிலேயே அவரவர் கையில் இராமலிங்க அடிகளாரின் மானங்காக்க அச்சடித்த 'வள்ளலாரைப் பாதுகாக்க அருளுலக அழைப்புத் திருவாணை' என்ற அறிவிக்கையை வழங்கினர்கள்.

இதற்குள், எவ்விதத் துணையுமின்றி யாமே எமது ஏழு வயது மகனையும், நான்கு வயது மகனையும் பெயரளவில் உதவிக்கு வைத்துக் கொண்டு அனைத்துப் பத்திரிகைகளுக்கும், பதிப்பகங்களுக்கும், இராமலிங்க

அடிகளாரைப் புகழ்ந்து புகழ் பெற்ற, பதவி பெற்ற, செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதர்களுக்கும் சுமார் இருநூற்றிற்கும் மேற்பட்ட அறிக்கைகளை அஞ்சல் வழி அனுப்பி வைத்தோம்.

பிறகு எமது இயக்கக் கொள்கை விளக்க முழக்க ஏடான **குருதேவர்** ஏட்டின் பதினான்காவது (14) அறிக்கையை '**<u>அருள்மிகு வடலூர் இராமலிங்க அடிகளார் சிறப்பு மலர்</u>**' என்று வெளியிட்டோம். பிறகு 1985ஆம் ஆண்டின் வைகாசித் திங்கள் ஞானம் வழங்கு பால்குடப் பெருவிழா சிறப்பு ஆண்டு மலரில் வடலூர் இராமலிங்க அடிகளாருக்கு இழைக்கப்பட்ட அவலக் கேவலங்களை விளக்கிக் கட்டுரை வெளியிட்டோம்.

ஆனால், கோடிக்கணக்கானவர்களின் நாயகராக விளங்குகின்ற அருட்பெருஞ்சோதி ஆண்டவர் வடலூர் இராமலிங்க அடிகளார் நாதியற்றுத்தான் இருக்கின்றார் என்ற பேருண்மையை விளக்கும் வண்ணம் ஒரே ஒரு வயதான துறவியார் (துறவி கந்தசாமி)தான் ஆறுமாதம் கழித்து இராமலிங்க அடிகளாரைக் கேவலமாக எழுதிய எழுத்தாளனின் முகவரியையும், அவனுடைய கட்டுரையை வெளியிட்ட மாத இதழின் முகவரியையும் கேட்டு அஞ்சல் எழுதியுள்ளார். இதுதான் தாங்க முடியாத வேதனை. மாபெரும் சோதனை. இந்தப் பெரியவருக்கு என்ன பதில் எழுதுவது? எப்படி எழுதுவது? என்றே எனக்குப் புரியவில்லை. பாவம் அவர் எமக்கு நேரடியாக அஞ்சல் எழுதாமல் போய்விட்டார். நம்மவர்கள் யாரேனும் ஒருவர் அவருக்கு இதமாகவும், பதமாகவும் நல்ல பதில் ஒன்றை அனுப்புங்கள்.

ஏனென்றால், பல இராமலிங்க அடிகளாரின் சன்மார்க்கிகள் 'இராமலிங்க அடிகளாரை யார் திட்டினாலும், அவரே பார்த்துக் கொள்ளுவார், நாம் பதில் சொல்லத் தேவையில்லை' என்று பொறுப்பில்லாமல் பேசி வருகிறார்கள். அதாவது, நாம்தான் வேலையற்றுப் போய் இராமலிங்க அடிகளாரை திட்டியவனுக்குப் பதில்

சொல்லியிருக்கிறோம் என்பதுபோல் பேசி வருகிறார்கள். இவர்கள் எல்லாம் ஏன் இப்படிப் பேசி வருகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? இவர்களெல்லாம் இராமலிங்க அடிகளாரிடம் உண்மையான பத்தியோ, பாசமோ இல்லாதவர்கள்; இராமலிங்க அடிகளாரின் பெயரை விளம்பர சாதனமாகப் (An Advertising Means or Agent) பயன்படுத்துபவர்களேயாவார்கள்.

எனவேதான், இவர்களெல்லாம் மாதாமாதம் அல்லது குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒருமுறை இராமலிங்க அடிகளாரின் பெயராலோ அல்லது அருட்பாவின் பெயராலோ கூடிப் பொழுது போக்கும், வியாபார நோக்கும், புகழ் நோக்கும், பொருள் நோக்கும், ... கொண்டு செயல்படுகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், இராமலிங்க அடிகளாருக்குப் பிடிக்காத சமசுக்கிருத மொழியில் ஆளுக்கு இரண்டொரு வாசகங்கள் தெரிந்து வைத்துக் கொண்டு மேடைகள் தோறும் அவற்றைக் கூறித் தங்களுக்குத் தெரிந்த சில அருட்பாக்களையே திருப்பித் திருப்பிக் கூறி பொழுதை வீணாகக் கழிக்கிறார்கள்.

பச்சையாகச் சொல்லப்போனால், இராமலிங்க அடிகளாரின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற ஆயிரக்கணக்கானவர்களில் உண்மையிலேயே இராமலிங்க அடிகளாரின் உருவத்தைக் கனவிலாவது கண்டவர்கள் எத்தனைப் பேர் இருக்கின்றார்கள்? என்று வினா எழுப்பி விடை தயாரித்தால்தான் இராமலிங்க அடிகளாரின் பெயரால் வாழுகின்ற கூலிகளையும், போலிகளையும், கருங்காலிகளையும், நீலிகளையும், அலிகளையும் ... புரிந்து கொள்ள முடியும்! புரிந்து கொள்ள முடியும்! புரிந்து கொள்ள முடியும்!

இப்படி நாம் கடுமையாகக் கருத்துக் கூற வேண்டியதற்குக் காரணம், நாம் சித்தர் வழிவந்த சித்தர்நெறியான இந்துமதம் தழைக்க வாழ்ந்த அருளுலக வாரிசான ஞானசித்தர் இராமலிங்க அடிகளாரின்

மானங்காக்கத் தன்னம்பிக்கையோடும், தன்மானத்தோடும், மொழிப்பற்றோடும், இனப்பற்றோடும், நாட்டுப்பற்றோடும், இந்துமத உரிமையோடும், அருளுலகப் பெருமையோடும் கொதித்துக் குதித்து எழுந்து பல்லாயிரக்கணக்கான அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும், மலர்களையும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். இந்துமத விரோதிகளும், துரோகிகளும் இராமலிங்க அடிகளாரின் புகழை எப்படியாவது நலிவுபடுத்தி, மெலிவுபடுத்தி, அழித்தொழிக்க தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இக்கட்டான நேரத்தில் இராமலிங்க அடிகளாரின் பெயரில் வாழுகின்ற பெருங் கூட்டத்தவர்கள் நமது அறப் போரை, அருட் போரை, தன்மானப் போரை, ... இருட்டடிப்புச் செய்ய முயலுகின்றார்கள்! இருட்டடிப்புச் செய்ய முயலுகின்றார்கள்! இருட்டடிப்புச் செய்ய முயலுகின்றார்கள்!

எனவே, நாம் மிகமிக எச்சரிக்கையாக யாருடைய மனமும் புண்படாமல் நம் கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டும். குருதி அவிர்ப்பலியும், இறைச்சிப் படையலும் உடைய நமது பூசை அறைகளில் ஞானசித்தரான இராமலிங்க அடிகளாரை அருவுருவ நிலை கடந்து, உலகியலுக்கு உட்பட்டு அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய ஒரு கடவுளாக, 'வழிபடுநிலையினராக' மாற்றும் பணியில் ஈடுபட வேண்டும். ஏளனம்பட்டியார் காலத்திலிருந்து நமது பூசைகளில் சொல்லப்படும் இராமலிங்க அடிகளாரின் அருள்வாசகங்களைத் தொடர்ந்து சொல்லுவதோடு அவரை ஞானசித்தராக உருப்பெறச் செய்த மந்திற, தந்திற, எந்திறங்களைப் பயன்படுத்தி அவருடைய படங்களுக்கும், சிலைகளுக்கும் உயிரூட்ட வேண்டும்! உயிரூட்ட வேண்டும்! உயிரூட்ட வேண்டும்! அவரும் சித்தர்நெறி வழி வந்த அருளாளர்தான் என்ற உணர்வோடு நமது பூசைகளில் அவருக்கும் பங்கு தாருங்கள்.

இனிமேல் நம்மவர்கள் வடலூர் இராமலிங்க அடிகளாரைப் பற்றிய உண்மைக் கருத்துக்களைப் பரப்பும் பணிகளில் ஈடுபட்டேயாக வேண்டும்.

துறவி கந்தசாமியின் அஞ்சலட்டையை இங்கு படித்துக் காட்டினேம். இவருக்கு யார் பதில் எழுதினுலும் அதன் நகலே இங்கு அனுப்பி வையுங்கள். இந்தப் பெரியவரை நாம் மதிக்க வேண்டும். போற்ற வேண்டும்...”

...... என்று எங்களது குருதேவர் உரையாற்றினுர். எனவேதான், மதுரையிலிருந்து சித்தர் மகன், சித்தரடியான், அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சி அம்மன் சன்னிதானம் வெ.செகதீசன் B.Sc., அவர்கள் தங்களுக்கு (பெரியவர் துறவி கந்தசாமி) எழுதிய பதில் அஞ்சலின் நகல் கிடைத்தவுடன் அதனேப் படித்துப் பார்த்து; அதில் எங்களுடைய முயற்சிகளேப் பற்றிய முழுமையான, முறையான, உண்மையான விளக்கங்கள் நன்கு தொகுத்துக் கூறப்படவில்லே என்பதனேச் சுட்டிக்காட்டி எமது குருதேவர் அவர் அருகிலிருந்த (பெ.சௌந்தரராசன் B.E.) தொட்டியம் மருதக்காளி சன்னிதானமான என்னே உடனடியாகத் தங்களுக்கு விரிவான பதிலஞ்சல் ஒன்று எழுதுமாறு ஆணேயிட்டார்.

நானும் நள்ளிரவு கடந்து விடியற்காலே வரை கண்விழித்து இந்த நெடிய அஞ்சலே நிறுத்தாமல் ஒரே தொடர்ச்சியாக எழுதி முடித்திருக்கிறேன். இதில் குற்றம் குறைகள் இருந்தால் என்னே மன்னித்து விடுங்கள். உங்களுடைய நட்பையும், தோழமையையும், அன்பையும் நாடுகின்றேன்.

6) ஐயா! பதினெண்சித்தர்கள் **‘இந்து’** என்ற சொல்லே 48 வகையான பொருளுடைய பொருளாழம் மிக்க சொல்லாகவே படைத்திருக்கிருர்கள். இந்துமதம் 43,73,085 ஆண்டுகளுக்கு முந்தியது. இதற்கென்று எண்ணற்றக் கலேகளும், சாத்திற தோத்திற நேத்திற அத்திறங்களும், நேம நியம நிடத நிட்டைகளும், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகளும், மறை முறை நெறி வேத சித்த நாத போத ஓதங்களும், ... நிறைய இருக்கின்றன. இவைகள் அனேத்தும் தெய்வீக அமுதத் தமிழில்தான் இருக்கின்றன. பிறமண்ணினரான

பிருமணர்களால் சமசுக்கிருத மொழியில் வழக்கிலிருக்கும் ***ஹிந்துமதம்***தான் கற்பனைகளையும், ஆபாசங்களையும், பொய்களையும், புளுகுகளையும், பயனற்றவைகளையும், மடமைகளையும் பெற்றிருக்கிறது.

எனவேதான், நாங்கள் பிருமணர்களிடமும், பிருமண அடிமைகளிடமும், பிருமணக் கூலிகளிடமும், தமிழினத் துரோகிகளிடமும், இந்துமத விரோதிகளிடமும் அகப்பட்டுக் கொண்டிருக்கும் 48 வகையான வழிபாட்டு நிலையங்களையும் (கோயில், ஆலயம், திருப்பதி, பீடம்,...) மீட்கும் பணியில் ஈடுபடாமல் ஆங்காங்கே அ.வி.தி. நிலையங்களை அமைத்து யாகம் செய்து அருளை அநுபவப் பொருளாக வழங்கி மக்களின் நோய்களையும், பேய்களையும், தொல்லைகளையும், அவலங்களையும் நீக்கி வருகிறோம்.

தாங்கள் எங்களுடைய தலைமைச் செயலகம் மதுரை மேலூர் கொட்டாம்பட்டிக்கு அருகில் இருக்கிறது என்பதைப் புரிந்து அங்கு சென்று அனைத்தையும் புரிந்து கொள்ள முற்படுங்கள். அருளுலக இருளகற்றி மதவழிப் புரட்சி செய்திட என்னைப் போன்ற இளைஞர்கள் மெய்ஞ்ஞானப் பயிற்சி பெற்றுப் படைநடத்திப் பாசறை அமைத்து செயல்பட ஆரம்பித்து விட்டோம். தாங்களைப் போன்ற பெரியவர்களின் அன்புநிறை வாழ்த்தை வரவேற்கிறோம். அருட்பயிர் விளைவிப்போம். வாரீர்! வாரீர்! வாரீர்!

**அன்பு**
**சித்தரடியான் பெ.சௌந்தரராசன்,**
**தொட்டியம் மருதக்காளி சன்னிதானம்,**
**22/06/1985.**

<u>நகலெடுத்தவர்</u>:-

அருள்மிகு கோட்டை மாரியம்மன் சன்னிதானம், பேட்டைக் காளியம்மன் பீடாதிபதி, சுடலைக்காரி ஆதீனம், சித்தர் மகன், சித்தரடியான் ம.செ.விசயராகவன் B.Sc., DTVT. (S/O சி.ம.செயராமன், 2/80, சுப்பிரமணியர் கோயில் அருகில், வேம்படிதாளம், சேலம் மாவட்டம்-637504)

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்புகூர்ந்து இதற்கு ஒரு பேரு நகலும், 1+1=2x3=6 கார்பன் நகல்களும் குருதேவருக்கு அனுப்பி வைக்கவும். வீ.மா.ச., M.C.இராமன், தஞ்சை இராமர், முசிறி பன்னீர்செல்வம், சிறுமுகை மோகனசுந்தரம், பெங்களூர் வேங்கட்டரமணன், வேலூர் PATC DM பெ.சுப்பையா B.E. முதலியோர்களுக்கு அவசியம் அனுப்பவும்.

<u>குறிப்பு</u>:- ABT மகாலிங்கம், வடலூர் சன்மார்க்க சங்க ஊரன் அடிகள், ம.பொ.சி., தாய், குங்குமம் இதழ்களின் ஆசிரியர்களுக்கும் அனுப்பவும்.

<u>முசிறி பன்னிர் செல்வத்தின் முகவரி</u>:-

க.பன்னிர்செல்வம், Telephone Inspector, கலிங்கன் லேன், காந்திநகர், முசிறி, திருச்சி மாவட்டம்-621211.

மற்ற முகவரிகளை வீ.மா.ச. அழைப்பிதழில் காண்க.

1+2 நகல், O.C., அடிகளார் கோப்பு, வீ.மா.ச.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு ம.செ.விசயராகவன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# பாலாலயப் பூசைமுறை, பூசாவிதிகள்

ஓம்

செம்பியம்,
5.6.85.

பேரன்புமிக்க வீரமாகாளியம்மன் சன்னிதானம் அவர்களுக்கு, கவிக்குமார் வரையும் மடல்.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் நலமே!

2) அருளுலகத்தாரின் ஆதரவிலும், பொருளுலகத்தாரின் உதவியிலும், நமது இயக்கத்தாரின் உழைப்பிலும் அருட்சேனைத் தளபதி முருகன் பிறந்த நாளான வைகாசித் திங்கள் முழுநிலவு நாளில் நிகழ்ந்த பால்குடப் பெருவிழா முழுவெற்றியைப் பெற்றது. அருளுலக வழக்கப்படி ஒருசில சோதனைகளும் நிகழ்ந்தன. சோதனைகளை ஏற்று உரிய சாதனைகளைப் புரிய குருதேவரும், நானும், உரிய நண்பர்களும் சென்னைக்கு வந்துவிட்டோம். இருந்த போதிலும் அங்கிருந்த அனைவரும் விழாவினை நன்கு நிறைவு செய்து நிலைத்தப் பயனையும் வெற்றியையும் நிலைநாட்டியமைக்கு நன்றி! நன்றி! நன்றி! இதுபோல் அனைத்தையும் தன்னம்பிக்கையோடும், தெளிவோடும் குருதேவரின் பதிலியாக நின்று செயலாற்றும் பங்கு நம்மவர்கள் அனைவருக்கும் வரவேண்டும்! வரவேண்டும்! வரவேண்டும்! அப்பொழுதுதான் நம்மவர்களிடையே தனிமனித அதிகாரமோ, எதேச்சாதிகாரமோ தோன்றிடாமல்; சமத்துவமும், சகோதரத் தத்துவமும், ஒற்றுமையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும், போட்டி பொறாமையற்ற மனப்பான்மையும், வறட்டு கவுரவமற்ற மனப்பான்மையும் தோன்றிடும்! தோன்றிடும்! தோன்றிடும்!

3) நாம் கொண்டாடுகின்ற விழாக்கள்தான் அருளுலகக் கருத்துக்களை சொல்வடிவிலும், செயல்வடிவிலும் பொதுமக்களுக்கு வழங்குகின்றன. எனவே, நாம் நமது விழாக்களை இந்துமத அடிப்படையிலும், மிகத் தெளிவான வரலாற்றுப் பின்னணியிலும் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சிகளாலும், தனிமனிதர்களும், குடும்பங்களும், கிராமங்களும் அநுபவப் பூர்வமாக அருளைப் பெற்று நன்மையடைவதின் மூலமும் நிலைத்த வடிவும், வாழ்வும், வளவளர்ச்சியும், புகழ் மிளிர்ச்சியும் பெறுமாறு செய்தல் வேண்டும். இந்த முறையையே கையாண்டுதான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் அமைத்த அரசு 600 ஆண்டுகள் நிலைத்திருந்தது. ஆனால், தவறுதலாக இந்த விழாக்கள் வடஆரியர்களிடமும், அரசியல்வாதிகளிடமும் சென்று விட்டதால்தான் தமிழர்கள் இன, மொழி, நாட்டு உரிமையை இழந்து இன்று தவிக்கின்றனர்.

நமது அருளரசு மலர்ந்தாலும் திருவிழாக்கள், இதுபோன்ற அருளுலக பெருவிழாக்கள் யாவும் தொடர்ந்து அருளாளர்களாலேயே நடத்தப்படும். எனவேதான், நாம் ஒவ்வொரு பண்டிகைக்கும் உரிய விளக்கங்கள் தந்து கொண்டே இருக்கின்றோம். என்றென்றைக்கும் குருமார்கள் வழிவருகின்ற குருபாரம்பரியத்திடம்தான் பொதுமக்கள் கலந்து கொள்ளும் விழாக்கள் இருக்கும். குருமார்கள் அரசுக்கோ, அதிகாரத்துக்கோ உட்படாமல் என்றும் உரிமையோடே செயல்படுவர். இன்று வந்து நாளை செல்லும் **அரசபாரம்பரியம்** குருபாரம்பரியத்தை மாற்றவோ, மீறவோ என்றும் இயலாது! இயலாது! இயலாது! எனவே, திருவிழாக்களின் அவசியமுணர்ந்து ஏற்றுச் செயல்பட வேண்டியது நமது கடமை! கடமை! கடமை! இதனையொட்டியே இயக்க விழாவான பால்குடப் பெருவிழாவிற்கு **மண்டலப் பூசை** நிறைவையொட்டி

வரும் **சூலை மாதம் 20ஆம் தேதி** மிகக் கோலாகலமாகக் கொண்டாட ஏற்பாடு செய்யுங்கள்.

4) மண்டலப் பூசை என்பது 48 நாட்கள் முடிந்த பிறகு செய்யப்படுவதாகும். குறிப்பாக, புதிய கருவறை அமைப்புக்கள், பழைய கருவறைப் புத்துயிர்ப்புக்கள், வெட்டவெளிக் கருவறைக்கு அருளாட்சி வழங்குதல்; வழிபடுநிலையினரின் தகுதிகள் 48 என்பதால் (Stages and Standards) அவர்களை பதினெண்சித்தர் பீடாதிபதிகள்தான் மேல்நிலைக்கு உயர்த்துகின்றூர்கள் (Promotion); எடுத்துக்காட்டாக பழையனூர் நீலியை தேவியாக்கியிருத்தல், சுடலைக்காரியை பத்திர காளியாக்கியது, தத்தனேரி சுடலைபத்திரகாளியை உலகியலுக்குக் கொண்டு வந்தது, வீரமாகாளியை போர்க்கோலம் பூண வைத்தது, திருத்தணி முருகனை நமது அருட்படைக்குத் தளபதியாகப் பொறுப்பேற்றுப் போர்க்கோலம் பூணச் செய்தது, ... முதலியவைகளைக் குறிக்கலாம்.

5) **பாலாலயம் = குடமுழுக்குக்கு முன் கருவறைப் புத்துயிர்ப்புக்காக பாலால் கருவறை மூலவர்களை முழுக்காட்டி பால்குடத்துக்குள் அருளை நிலைநிறுத்தி வசதியான இடத்தில் வைத்துப் பூசை செய்வது.** இந்தச் சொல்லையே வட சொல் என்று நம்புமாறு செய்துவிட்டனர் பிறமண்ணினர். அதனுல்தான், கோயில்களைப் பற்றிய சுருதிகள், ஆரணங்கள், ஆகமங்கள், பூசாவிதிகள், தோத்திரங்கள், நேம நியம நிடத நிட்டைகள், ... முதலியவைகள் பிருமணர்களின் சமசுக்கிருதத்தில் இருக்கின்றன என்ற தவருன எண்ணம் உருவாகிவிட்டது. <u>ஆனுல், மேற்கூறிய எதுவுமே சமசுக்கிருதத்தில் இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!</u> இருந்தபோதிலும் <u>பிருமணர்கள் தங்களுடைய செத்துப் பிறந்த குழந்தையான, வெறும் தசைப் பிண்டமான, வளர்ச்சியற்ற சமசுக்கிருத மொழியில் அனைத்தும் இருப்பதாக நடித்து ஏமாற்றி வருகின்றூர்கள்</u>. இதனுல்தான், இந்துமதத்தின் அருளூற்றுக் கண்களான பதினெண்சித்தர்களின் ஏட்டுலக சாதனைகளும், நாட்டுலக சாதனைகளும்

பயன்படுத்துவாரின்றி கெட்டுப் போய்விட்டன. எனவேதான், சமசுக்கிருதம் இந்துமதத்தை கெடுத்து விட்டது என்று குறைகூறி குற்றம் சாட்டி வருகின்றோம்.

5) 48 வகையான வழிபாட்டு நிலையங்களும், இளமையான நிலையில் அதாவது **பால் குடிக்கும் குழந்தையின் நிலையில்** பாதுகாக்கப் பட்டுத்தான் பிறகு மனிதன் நிலைக்கு வளர்ந்து வருகின்றன. இதன் அடிப்படையில்தான் குடமுழுக்கு விழாவிற்கு முன்பு, அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களுக்கும் பால் குடிக்கும் குழந்தைப் பருவ நிலையிலிருக்கும் வழிபாட்டு நிலையம் அமைக்கப் படுகின்றது. அதுவே **பாலாலயம்**.

**சிறப்புக் குறிப்பு**:-

‘பால்’ என்பது குருதியின் பதப்படுத்தப் பட்ட நிலையே ஆகும். பாலைப் பருகுவது என்பது குருதியைப் பருகுவதற்கு ஒப்பாகும்.

இதற்கு மிகப்பெரிய விளக்கம் குழந்தை நிலையிலிருக்கும் வழிபாட்டு நிலையத்தைப் பதப்படுத்தப்பட்ட குருதியான பாலின் மூலம் அருளேற்றி பாதுகாப்பதே **பாலாலயப் பூசைமுறை**.

நன்கு வளர்ந்து காளைப் பருவம் எய்திய மனிதனுக்கு பச்சைக் குருதியே பாலை விட வலிமை தரும் என்பதற்கேற்ப திருப்பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டு முழுமையெய்தி இளமையின் வலிவும், வாய்ப்பும், வாளிப்பும் எய்தி நிற்கும் வழிபாட்டு நிலையம் பச்சைக் குருதியில் முழுக்காட்டப்பட்டு அருளேற்றி பூசை செய்வது **பூசாவிதிகள்**.

பாலாலயக் கருவறையன்றி மற்றக் கருவறைகள் அனைத்தும் காலைக் கதிரவனின் ஒளிக்கு முன்பே குருதியில் நீராடும் மூலவர்களையே பெற்றிருக்கும் அருள்வழங்கும் ஆதவனைப் பெற்றிடுவதே **பூசாமுறை**.

6) நாம் நான்கு சதுர்மறை யுகங்களுக்கு முன்பே தோன்றிய அனைத்துக் காவல் தெய்வங்களையும் புத்துயிர்ப்புச் செய்யவும், “காவல் தெய்வப் புத்துயிர்ப்புத் திருவிழா”, பால்குட விழாவிற்கு முதல் நாளில் ஆலமரத்தடியில்; முடிந்தால் பஞ்சவடி இருக்குமிடத்தில் பாலாலய முறையில் கொண்டாடுகின்றோம். இந்தப் பாலாலயம் காலப் போக்கில்தான் நமது வெற்றிகளுக்கேற்ப குருதி முழுக்காட்டு விழாவாக, குருதி அவிர்ப்பலி விழாவாக, இறைச்சிப் படையல் விழாவாக அமைந்திடும்.

எனவே, நமது மண்டலப் பூசையில் காரியேந்தல்பட்டியில் ஆலமரத்தடிக்கு அருகில், இல்லையென்றால் குளக்கரையில், (இல்லையென்றால் கோச்சடை முனீசுவரர் சன்னிதானத்தின் தோட்டத்தில்) ஓரிடம் தேர்ந்தெடுத்து ‘அனைத்துக் காவல் தெய்வப் புத்துயிர்ப்பு ஐந்தீ வேட்டல் அருட்கோட்டம்’ என்ற ஒன்று அமைத்திடுங்கள். அங்கே நமது வசதி வாய்ப்புகளுக்கேற்ப பலிகள் தந்து படையலிட்டு, இந்த ‘அனைத்துக் காவல் தெய்வப் புத்துயிர்ப்பு’ செய்வோம். பால்குடப் பெருவிழாவிற்கு உடனே மறுநாள் ‘விடையாற்றித் திருவிழா’ செய்து விடுவதால் நாம் அதற்கென்று மண்டலப் பூசை கொண்டாடத் தேவையில்லை.

ஆனால், இந்தப் பால்குடப் பெருவிழாவும், விடையாற்றித் திருநாளும் அருளாட்சி அமைப்புப் பணிக்காக பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் தோற்றுவிக்கப் படுபவை என்பதால்தான், இவற்றிற்காகவும், நமது மண்டலப் பூசையில் பூசை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, 20/7/85 மாலை அல்லது இரவு அல்லது ஞாயிறு காலை அல்லது மூன்று நேரங்களும் சேர்த்துக் கொண்டாடப்படும் மண்டலப் பூசையில் வலைச்சேரிப்பட்டி, கொட்டாம்பட்டி, காரியேந்தல்பட்டி என்ற மூன்றிற்குமுரிய வழிபாட்டு நிலையங்களை யெல்லாம் இணைத்து விரைந்தும் விரிந்தும் குருதிப்பலி செய்து கொண்டாடும் மண்டலப்

பூசைத் திருவிழாவை தாங்களே முடிவு செய்து திட்டத்தை எமக்குத் தெரிவியுங்கள்.

7) எல்லோருக்கும் நன்றி தெரிவித்துக் கடிதம் அனுப்பியுள்ளோம்.

8) சோ.இரவீந்திரனும், D.M. சுப்பையா அவர்களும் பயணம் மேற்கொண்டு தமிழகம் முழுவதும் சுற்றி வருகின்றனர். நேரில் அறியவும்.

9) குருதேவரின் வருகை முன்னதாக வேண்டுமென்றுல் இரண்டு நாள் தங்கி அனைவரின் வேண்டுகோளை நிறைவேற்றத் தயாராக குருதேவர் உள்ளார்.

**அன்பு**
**கவிக்குமார்,**
**05/06/1985.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூல நகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# செயல் விளங்கு அறிவுரை நல்கு திருவோலை

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. சித்தரடியார் என்ற தரமும் உரமும் பெற்ற சோ.இரவீந்திரன் அவர்கள் இன்னும் செயல் விளங்கு நிலைகளைப் பெறுதிருப்பது வருத்தத்திற்குரியதே.

2) எங்கு சென்றாலும் நமக்குத் தொடர்பானவர்களின் முழுமையான சிந்தை நிலை, நெஞ்ச நிலை, உடல் நிலை, உலகியல் நிலை, உறவு நிலை, உற்றார் நிலை, ஊரார் நிலை, உரிமை நிலை, உணர்வுப் பக்குவம், எண்ணப் பக்குவம், கருத்து வளர்ச்சி நிலை, பயிற்சி முதிர்ச்சி நிலை, குல தெய்வ நிலை, ... முதலியவைகளை எல்லாம் நன்கு முறையாகவும், நிறையாகவும் குறையற ஆராய்ந்திடல் வேண்டும். அதன்பிறகுதான், அருட்பணியாற்றுதல் வேண்டும். இதைத்தான் சித்தர்கள் "**எப்போதும் அருளாளர்கள் முக்கால் பங்கு அறிவையும், கால் பங்கு அருளையும் செயல்படுத்துதல் வேண்டும்**" என்று கூறியுள்ளார்கள். இந்தக் குருபாரம்பரியக் கருத்தைத்தான் குருவாசகத்திலுள்ள '**மந்திரம் கால் மதி முக்கால்; எந்திரம் முக்கால் தந்திரம் கால்**' என்ற வாசகம் கூறுகிறது. உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுக.

3) யாம் முன்பு சிறுமுகைக்காரர்களின் செல்வன் அருட்கணிப்பை அனுப்பிய போதே அது மிகமிக காலதாமதமாகத்தான் கிடைத்தது. அதனால், விரோதிகளும், துரோகிகளும் அஞ்சல் நிலையத்திலும், பிற நிலையங்களிலும் செயல்படுகிறார்கள் என்பது தெளிவு. இது பற்றி யாமும் பலமுறை விளக்கம் கேட்டு எழுதியும் பதிலே இல்லை. எனவே, அருள்மிகு சித்தரடியான் சிதம்பரம் அவர்கள் இன்னும் முழுமையான தற்காப்பு நிலையை அடையவில்லை என்று தெரிய வருகிறது. இந்த எச்சரிக்கையை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படுக.

4) ‘சிறுமுகையில் உள்ள அருட்குடும்பத்தார்கள் (மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்) உடனடியாக வீரமாகாளி சன்னிதானம், ஆலவாய் மூதூர் தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம், சிங்கம்புணரி சேவுகப் பெருமாள் சன்னிதானம் முதலியவர்களை சிறுமுகைக்கு வரவழைத்துப் பூசைகள் செய்து எல்லா வகைகளிலும் ஆராய்ந்து பார்த்து அதன்பிறகு என்னை சிறுமுகைக்கு அழைக்க வேண்டும்’ என்று யாம் அஞ்சல் அனுப்பியும் அவர்கள் சித்தரடியார் சோ.இரவீந்திரன் மட்டும் பூசைகளைச் செய்து எம்மை வரவழைக்க ஏற்பாடு செய்திருப்பது பெரிய சோதனையே. “விதி வரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே” => புரிந்து செயல்படுக!

5) ‘மூன்றும் முப்பெரு விழா’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும், ‘இரண்டாம் முப்பெரு விழா’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் பத்து நாட்களுக்கு முன்பே சிறுமுகையூர்க்கு அனுப்பி எமக்கு ஆயிரம் பிறதிகளும், காரைக்குடி, திருச்சி, மதுரை, காரியேந்தல்பட்டி ஆகிய இடங்களுக்கு ஆயிரம் பிறதிகளும் (ஒவ்வொரு இடத்திற்கும் இருநூற்றைம்பது பிறதிகளும்), சிறுமுகை, மேட்டுப்பாளையம், கோவை, வட்டாரத்தில் மூவாயிரம் பிறதிகளும் அச்சிட்டு வழங்கி எம்மை வரவேற்க பக்குவமான சூழ்நிலையை உருவாக்குமாறு எழுதினோம் யாம். ஆனால், நீங்களோ இப்போதுதான் எமது வருகைக்கு எப்படி அச்சிட்டு அளிப்பது என்று எழுதுகிறீர்கள். இது அருட்குடும்பத்தின் எதிரிகள் வலிமையைக் காட்டுகிறது. எனவே, இன்னும் ஒருசில மாதங்களுக்கு யாம் சிறுமுகை வர இயலாது. எமது பயணத் திட்டத்தை தள்ளிப் போட்டு விடுங்கள்.

6) எமக்கு விடுமுறை இருப்பதால், வரும் 18, 19, 20 யாம் திருச்சி வருகிறோம். எடமலைப்பட்டிபுதூர் வட்டாரத்தில் யாம் தங்கி நீராடி ஓய்வெடுக்க வசதியான ஓர் அறை ஏதேனும் ஒரு விடுதியில் (லாட்ஜ்) ஏற்பாடு செய்யக் கூறவும். உங்களுடைய மூங்கில் கடை வட்டாரத்திலேயே மூன்று நாட்களும் தங்கிச் செயல்பட விரும்புகிறோம்.

திருச்சி மாவட்டம் முழுவதும் இதை அறிவித்து செயல்படவும். ... ... ... ... ... [இரண்டு *வரிகள் மூல நகலில் தெளிவாகத் தெரியவில்லை.*]

7) எம்மை மதுரைக்கோ, நிலக்கோட்டைக்கோ அழைத்துச் செல்ல விரும்புகிறவர்கள் உடனடியாக எம்மோடு தொடர்பு கொள்ளட்டும். அல்லது வேறு நாட்களில் அங்கு அழைத்துக் கொள்ளட்டும். உறையூரில் வெக்காளி கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், ஓயாமெரி, மலைக்கோட்டை, உய்யக்கொண்டான், குட்டிக்குடி குழுமாயி, திருவானைக்காவல், திருவரங்கம், இலால்குடி, காட்டூர் ... முதலிய வட்டாரங்களில் யாம் அருட்பணியாற்றினாலே போதும். ஏனெனில், தாங்கள் விரைவில் சென்னை வந்து தங்கியிருந்து எம்மோடு செயல்பட வேண்டியிருக்கும். அதாவது, தாங்கள் அங்கு இருக்கும் போதே திருச்சி மாவட்டம் முழுவதும் அ.வி.தி. முழுமையான வளர்ச்சியையும், வலிமையையும் பெற்றிட வேண்டும். அப்போதுதான், கருத்துப் புரட்சி, எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, உணர்வுப் புரட்சி முதலியவைகளின் மூலம் பண்பாட்டுப் புரட்சியையும், நாகரீகப் புரட்சியையும் செய்து சமய மறுமலர்ச்சியையும், சமுதாய மறுமலர்ச்சியையும், அரசியல் விழிச்சியையும் தோற்றுவிக்க முடியும்! முடியும்! முடியும்!

நாம் ஒரு மாபெரும் தத்துவத்தின் வாரிசுதான். ஒரு மாபெரும் பாரம்பரியத்தின் கனவுகளை நனவாக்கப் பாடுபடுகிறோம். மொழிப்பற்றோ, நாட்டுப்பற்றோ, இனப்பற்றோ இல்லாது கூலி வாழ்வும், போலி வாழ்வும் வாழும் தமிழின மக்களை ஒன்றுபடுத்தி ஒற்றுமைப்படுத்த முயலுகிறோம். இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மொழிவழிப்பட்ட இனங்கள் இருந்தும், அவையனைத்தையும் நலிவடையச் செய்து அழித்தொழித்திடும் மாபெரும் சதி இந்திமொழி வழிப்பட்ட இனத்தவர்களால் நடத்தப்பட்டு வருவதைத் தடுத்து எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும். இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும்,

ஆட்சி மொழியாக வேண்டும். இந்தியாவுக்கு அனைத்து மாநிலங்களும் தன்னாட்சி பெற்ற ஒரு கூட்டாட்சி அரசே (United States of India) தேவை. இந்தியாவில் எந்த மதம் வளர்ந்தாலும் கவலை இல்லை. இந்திமொழி வெறி எனும் மதம் மட்டும் வளரக் கூடாது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மொழியினரும், தங்களுடைய பண்பாட்டையும், நாகரீகத்தையும் செழிப்பாக வளர்த்துக் கொள்ளும் நிலையும், வசதிவாய்ப்புக்களும் தரப்பட வேண்டும். 'இந்தியா ஒரு நாடு' என்ற தவறான கருத்தின் மூலம் குறிப்பிட்ட சில மாநிலத்தவர்கள் மட்டும் மற்ற மாநிலத்தவர்களை ஏமாற்றி, சுரண்டி, கொள்ளையடித்து, அடிமையாக்கி வாழுகின்ற சர்வாதிகார ஆட்சி கூடவே கூடாது. ... முதலிய கொள்கைகளுக்காகவே பாடுபட வேண்டும். இவ்வளவு பெரிய செயல்திட்டங்களை உடைய நாம் மிகுந்த எச்சரிக்கையோடும், விழிப்போடும் செயல்பட வேண்டும்.

8) "நாம் யாரையும் ஏமாற்ற வேண்டாம். நம்மை யாரும் ஏமாற்றவும் கூடாது" என்ற குருவாசகக் கருத்தைப் புரிந்தும், புரிய வைத்தும் செயல்படுக. தாங்கள் உடனடியாக மதுரை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் மின்னல் வேகச் சுற்றுப்பயணம் செய்வதுதான் நல்லது. உணர்ந்து செயல்படுக! உணர்த்திச் செயல்படுக! இல்லாவிட்டால், சேலம் மாவட்டத்தில் அருட்பணிகள் வேகமாக வளர்ந்து, வேகமாகத் தளர்ந்தது போல; கோவை மாவட்டத்திலும் விரைந்து வளர்ந்து, விரைந்து தளர்ந்து விடும். எச்சரிக்கை! இதற்காகத்தான் இ.ம.இ.யின் வரலாற்றையும், கொள்கை விளக்கத்தையும் இணைத்து ஒரே நூலாக, மலிவுப் பதிப்பாகச் சில ஆயிரம் பிறதிகள் அச்சடித்து நாம் சுற்றுப்பயணம் செய்கின்ற வட்டாரத்தில் மட்டுமாவது பதினைந்து நாட்களுக்கு முன்பே வழங்கி மக்களின் அறிவு விழிச்சியைக் கிளர்ச்சியாக்கி, வளர்ச்சியாகும்படிச் செய்ய வேண்டும். அப்போதுதான், நமக்குக் கணிசமான அளவாவது வெற்றி கிடைக்கும். எச்சரிக்கை!

9) தாங்கள் மதுரை சென்றால் மேலமடைப் பாண்டியனை அவருக்கு அனுப்பியவைகளை அச்சடிக்கச் சொல்லுங்கள். அதேபோல், வேம்படியான் மணிக்கு, செகதீசனுக்கு, நீலமேகம்பிள்ளைக்கு அனுப்பியவைகளையும் அச்சடிக்கச் சொல்லுங்கள். அப்போதுதான், தமிழ்நாடெங்கும் பரவலாக உள்ள மதமறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும் திருந்தி நம் பக்கம் சேர முடியும். எச்சரிக்கை! இதற்குரிய பக்குவத்தை மதுரை மாநகர் அடையவில்லை யென்றால் யாம் மீண்டும் மீண்டும் திருச்சிக்கு மட்டும் வந்து திரும்ப வேண்டியிருக்கும். திருச்சி தமிழகத்தின் மையம் என்பதாலும், தாங்களும், தங்கள் தந்தையும், மற்றவர்களும் பேரார்வம் காட்டிச் செயல்படுவதாலும் யாம் திருச்சி வருவதே நல்ல பயன் உடையது. உடனே காரியேந்தல்பட்டி செல்க! பதில் எழுதுக! எல்லாம் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே என்று உணர்ந்து செயல்படுக!

அன்பே சிவம்!
ஓம் திருச்சிற்றம்பலம்!

அன்பு
**ஞானத்தந்தை, குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்** சொல்ல எழுதியது
ஆதிசங்கராச்சாரியார் ஆதீனம்,
கடுவெளிச் சித்தர் பீடாதிபதி,
பதினெண்சித்தர் மருளாடு நாயகம்,
தேவி காத்தாயி அம்மன் சன்னிதானம்,
சமயக்குரவர் திருஞானசம்பந்தர் திருவடி,
சித்தரடியான் இரா.இரகுநாதன்,
எண்:3, பழைய G.S.T.ரோடு, திலகவதி நகர், சென்னை-600049.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியான் திரு இரகுநாதன் கையெழுத்தில் இருந்தது.//**

# அடிமைத் தமிழா முடிவெடு விடிவு பெற!

ஈழத் தமிழர் படுகொலைக்கு இனத் தமிழா!
வேழமெனப் பழிவாங்கிட மொழிவழி ஒற்றுமைப்படு.
ஆழ்கடல் கடந்து வாழ்பவர் அழுகிடணுமா?
அழுதிடவோ எழுதிடவோகூட ஒற்றுமை இல்லையே!
பழுதுற்றிட்ட தமிழினமே நினைவுறு பாரம்பரியத்தை
தொழுது வாழும் கோழைதானு நீ இறுதிவரை?
இழுபறியா நீ? ஈனப்பிறவியா நீ? கங்காணியா நீ? எடுபிடிதானு நீ?
கழுவிக் கொள் களங்கத்தைக் காலம் வந்துற்றது வேங்கையாகிடு!
முழு வலிமையுறு மூவுலகும் வென்றிடலாம் மூத்தகுடியே!
எழுந்திடு! இன துரோகியாய்! விரோதியாய்! இருந்திடாதே.
ஏழுபிறவியிலும் போக்கிடவியலாப் பழியுருதே! வீறுற்றிடு.
தழுவாதே அன்னியரைப் போதும் தாழ்வு.
கட்சியென்ன? ஆட்சியென்ன? சூழ்ச்சியே அனைத்தும்!
விழிச்சியுறு! எழிச்சி பெறு! கிளர்ச்சி செய்! மறுமலர்ச்சி பெறு!
கூலியாய் வேலியாய் அன்னியர்க்கு உழைத்தது போதுமய்யா!
புலியாய்! புயலாய்! மாறிடு! மாறிடு! புகழ் பெற்றிடு பெற்றிடு!

- கவிமழை, தமிழ் வேந்தன்.

**//உண்மை நகல்//**

**//மூலம்: கையெழுத்துப் பிறதி நகல்.//**

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



“... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் வடஆரியர்களின் வேதமத மாயையிலிருந்தும், சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்தும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் விடுவித்தால்தான் அருளாட்சி அமைக்க முடியும் என்று கண்டறிந்தார். இப் பேருண்மையினை விண்டுரைத்திட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்களை உருவாக்கி காவல் தெய்வங்களைப் புத்துயிர்ப்புச் செய்யும் பணியைச் செய்திட்டார் ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org